O.S.42/2019
PW3 – வீரமுருகன்
நாள் 07.03.2026, 01.30 P.M.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** இந்த வழக்கின் 1ம் வாதி எனது பெரியப்பா என்றால் சரிதான். 2ம் வாதி எனது பெரியம்மா என்றால் சரிதான். 3ம் வாதி எனது தாயார். இந்த வழக்கில் சாட்சியம்அளிப்பதற்காக நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால்சரிதான். வாதிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.39 முதல் வா.சா.ஆ.48 வரை உள்ள ஆவணங்களில் நான் தரப்பினராக இல்லை என்றால் சரிதான். எனது அப்பா தரப்பினராக உள்ளார். நான் அந்தஆவணத்தில் தரப்பினராக இல்லாத நிலையில் அந்த ஆவணத்தின் தரப்பினரை விசாரித்தால் தான் உண்மை தெரியவரும் என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் நான் தரப்பினராக இல்லாததால் அந்த ஆவணம் குறித்து எனக்கு சாட்சியம் அளிக்க தகுதியில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு அருகே நான்குமால்களாக காட்டப்பட்டுள்ள நான் தரப்பினராக உள்ள ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. தாவா சொத்தின் சர்வே எண் வேறு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் உள்ள சர்வே எண் வேறு என்றால் சரியல்ல. வடிவேல், ராமகிருஷ்ணன் என்பவருக்கு அண்ணாசாமி பாண்டியன் எழுதிக்கொடுத்த ஆவணம் தாவா சொத்தில் சர்வே எண்ணில் வருகிறது. அந்த சர்வே எண். 192/2 என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தைவாதிகள் வாங்கிய போது சர்வே எண்.192/2 பின்னர் 2003ல் பட்டா மாற்றம் செய்த போது சர்வே எண். 192/9 என மாறியது. பின்னர் 1,2 பிரதிவாதிகள் பெயரில் சர்வே எண். 192/14 என மாறியுள்ளது. தாவா சொத்தானது ஆரம்ப முதலே 192/14 சர்வே எண்ணில் தான் அமைந்துள்ளது என்றாலும் நான் தாவா வழக்கு குறித்து சரிவர தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண நிரூபன வாக்குமூலத்தின் படி இன்றைய தேதியில் எனது வயது 31 என்றால் சரிதான். தாவா வழக்கானது 2003ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்ட போது எனது வயது 8 என்றால் சரிதான். நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில்

தாவா வழக்கின் சங்கதிகள் ஆரம்ப முதல் எனக்கு தெரியும் என்று கூறியுள்ள நிலையில் தாவா வழக்கு தாக்கல் செய்த போது எனக்கு வயது 8 என்பதால் தாவா வழக்கு பற்றிய சங்கதிகள் என தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. 1ம் வாதி எனது பெரியப்பா என்பதால் அவரிடம் வழக்கு சங்கதிகள் பற்றி தெரிந்து கொண்டேன். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் 1ம் வாதியிடம் வழக்கு சங்கதிகளை கேட்டு தெரிந்து கொண்டதாக கூறவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை சுற்றிலும் வீடுகள், காலிமனைகள் உள்ளது என்றால் சரிதான்.

3. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் தாவா சொத்தில் விவசாயம் செய்து பயிர் காப்பீடு செய்ததாக கூறியது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்தில் விவசாயம் செய்ததாக, பயிர் காப்பீடு செய்ததாகவோ எந்த வித ஆவணங்களையும் இந்த வழககில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்து. நான் சொல்வது போல் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை, வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.39 முதல் வா.சா.ஆ.42 ஆவணங்கள் எங்களது குடும்பத்திற்குள்ளேயே ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். நான் சொல்வது போல் தாவா சொத்து வாதிகள் அனுபவத்தில் இல்லை என்றாலும், 1,2 பிரதிவாதிகள் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் 2 மற்றும் 3 வாதிகள் எனது பெரியம்மா, அம்மா என்பதால் அவர்கள் தாக்கல் செய்த பொய்யான வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா வழக்கில் வாதிகள் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல, வழக்கானது தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.07 18:32:28 +0530